கொள்முதல் விலையில் கூட்டிக் கொடுத்து, அரசுக்கு விற்பனை செய்யும் அனைத்து விவசாயிகளும் நன்மையடைய அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதிலே சில திட்டங்கள் மத்திய அரசின் திட்டமாக இருப்பதால் நாம் அது குறித்து பரிசீலனை செய்து முடிவு செய்ய வழியில்லை.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுபோன்ற மானிய திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விதை பொருள்கள், பூச்சி மருந்துகள் திரும்பத் திரும்ப ஏற்கனவே அளிக்கப்பட்டவர்களுக்கே அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுவதால், ஊராட்சி ஒன்றியங்களில் யார் யாருக்கு எப்போது அவைகள் வழங்கப்பட்டன என்பதைக் குறித்து பெயர் பட்டியல் போர்டு வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு என்னென்ன முறைகளை, என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவற்றை எடுப்பதற்கு அரசு முயற்சிக்கும்.

பலநிற பருத்தி உற்பத்தி

*வினா எண். 1068 திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல நிற பருத்தி உற்பத்தியாவதை அரசு அறியுமா?

(ஆ) அவற்றை தமிழ்நாடு பூராவும் அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) பல நிற பருத்தி உற்பத்தியாவதை அரசு அறியும்.

(ஆ) பலநிற பருத்தியை அபிவிருத்தி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன் என்றால், இந்த பருத்திகள் வியாபார நோக்குடன் பயிர் செய்யப்படுவதில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல துணிகளில் சாயம் வெளுத்துப் போய்விடுகின்றன. பல நிற பருத்தி கிடைத்தால், அந்த இயற்கையான நிறம் அப்படியே இருக்கும். சாயம் வெளுத்துப் போகாமல் இருப்பதையொட்டி, இந்த பலநிற பருத்தி விதையை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு அதிகமாக விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பல நிற பருத்தி பெரும்பாலும் ரஷ்யாவில் காணப்படுகிறது. அங்கே கூட காட்சிப்பொருளாகத்தான் அந்தப் பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறதே தவிர, சாயம் வெளுக்காமல் இருப்பதற்கு அதைப் பயன்படுத்த இயலாது. ஏனென்றால் இந்தப் பருத்தியின் சாயமும் வெளுத்து விடும்.